**மஹியங்கன பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 24 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மஹியங்கன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) பண்ட உதவிகள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 2,328,470 தொகை கடன் கொடுத்தோர்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதலயாய நீர் செயற்திட்டத்திற்கு மணல் வழங்கியது தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 1,507,680 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 1,389,380 தொகை ஒதுக்கியிருந்தமையால், கடன்கொடுத்தோர் ரூபா 118,300 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 1988 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை கொள்வனவு செய்திருந்த ரூபா 582,864 இற்கான பெறுமதியுடைய 149 பொருட் பதிவேட்டு பண்டங்கள் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 605,269 இற்கான பெறுமதி கூட்டியவ வரி பெறுமதி அந்த கணக்கில் சரியாக வரவு செய்திருந்த போதிலும், திரண்ட நிதியக் கணக்கு பிழையான முறையில் செலவு வைத்துள்ளமையால் திரண்ட நிதியம் அந்த தொகையினால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(உ) முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படும் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் கணக்குகளில் காணப்பட்ட இணங்கியிருக்காத ரூபா 50,804 இற்கான மீதியை பிழையான முறையில் வருமானத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 425,440 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் கணக்கிற்கு மற்றும் மூலதன செலவீட்டுக்களின் அரசிறை உதவுத் தொகை கணக்கிற்கு கணக்கீடு செய்திருக்காமையால் குறிப்பிட்ட கணக்கு அப்பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) கடந்த ஆண்டின் போது 3 வருடங்களுக்கான முற்பெறுவனவாக பெற்றிருந்த சுற்றாடல்சார் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 31,748 தொகை மீளாய்வாண்டிற்கான பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 25,208,862 தொகைக்காக பெறவேண்டிய கணக்கு மீதியில் 26 ஆண்டுகளை உடைய வீதவரி ரூபா 2,177,423 தொகை, 3 வருடங்கள் உடைய நிலுவை மூலதன உதவி ரூபா 14,861,318 தொகை, 17 வருடங்களை உடைய ஏனைய வருமான நிலுவை ரூபா 8,117,428 தொகை, 6 வருடங்களை உடைய ரூபா 52,693 இற்கான முற்பணங்களை அறவீடு செய்தவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 31,424,626 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதியில் 03 வருடங்களை உடைய பலவின செலவு கடன் கொடுத்தோர் ரூபா 6,438,852 தொகை, நிர்மாண வேலைகள் கடன் கொடுத்தோர் ரூபா 24,985,774 தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 8,764,548 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் | | |
| (i) பிரிவு 49 | | 2017 ஆண்டின் போது 05 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்கண்டிருந்த போதிலும், அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 127 | | சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் 28 மயானங்கள் தொடர்பாக அந்த காணிகளின் அளவு மற்றும் உரிமை தொடர்பாக சரியான விபரங்கள் உறுதிப்படுத்தியிரு க்கவில்லை. |
| (iii) பிரிவு 128 | | பிரதேச சபையின் 18 காணிகள் மற்றும் கட்டிடங்களை மற்றும் சபையினால் பயன்படுத்தப் படுகின்ற 22 ஏக்கர் 3 ரூட் 37 பர்சஸ்கள் காணி அமைந்துள்ள ஆதனங்களின் உரிமையை உரித்தாக்கி யிருக்கவில்லை. |
| (iv) பிரிவு 158 மற்றும் 159 | 5,250,922 | நிலுவை கடை வாடகை, வீதவரி மற்றும் நீர் கட்டணங்களை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் சட்டம் | 82,500 | 2015 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை முத்திரை வரி பெறுமதியினை சம்பளத்தில் அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி யிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(3),(4) | - | பெக்கோ லோடர் ஒன்று 2017 அக்தோபர் 04 திகதி விபத்துக்கு உள்ளாகிய காரணத்தினால் ஆரம்ப அறிக்கை ஒன்று மற்றும் முழுமையான அறிக்கை ஒன்று சமர்பித்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 668,144 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலம் கடந்துள்ள இரண்டு வைப்புக் மீதிகளை ஆதனவழப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756(1) | - | 2015, 2016, 2017 ஆண்டுகள் தொடர்பாக பண்டக் கணிப்பீட்டு சபை அறிக்கை 2018 மார்ச் 06 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 13,062,705 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,479,131 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 5,231,235 | 3,031,235 | 2,172,598 | 858,637 | 5,181,235 | 3,031,235 | 1,846,531 | 1,184,704 |
| (ii) வாடகை | 14,235,562 | 2,228,450 | 1,922,950 | 305,500 | 12,024,582 | 2,336,200 | 1,944,600 | 391,600 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,103,000 | 2,115,660 | 2,160,910 | 45,250 | 906,000 | 906,600 | 1,638,442 | - |
| (iv) ஏனைய வருமானங்கள் | 21,409,500 | 5,399,332 | ,2,825,263 | 2,574,069 | 15,055,850 | 4,662,494 | 3,605,894 | 1,056,600 |
| மொத்தம் | 41,979,297 | 12,774,677 | 9,081,721 | 3,783,456 | 33,167,667 | 10,936,529 | 9,035,467 | 2,632,904 |
| | ======== | ======== | ======== | ======== | ========= | ========= | ========= | ======== |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 12.8 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 9 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும், வருட இறுதியில் ரூபா 3.8 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட வேண்டி இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமான அறவீடு செய்தல் 44 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

2017 திசெம்பர் 31 திகதிய வீதவரி பதிவேட்டின் பிரகாரம் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 1,962,789 தொகையாக இருந்ததுடன், அந்த நிலுவை மீதியில் 21 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 5000 விட மிகையான நிலுவை ரூபா 594,041 தொகை காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை வாடகைப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும், 13 கடைகளுக்காக 2011 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாக வைத்து ரூபா 2,000 மற்றும் ரூபா 1,700 என வாடகை அறவிடப்பட்டிருந்தது. 2017 ஜனவரி 23 ஆம் திகதி புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை சபைக்கு கிடைத்திருந்த போதிலும், அதனை செயற்படுத்தாமையினால் மீளாய்வாண்டிற்கான ரூபா 567,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற வியாபார நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமெனினும், தனியார் வர்த்தக தொடர் கட்டிடத்தில் நடாத்தப்படுகின்ற 17 வர்த்தகங்களிலும் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டத்தில் திருத்தப்பட்ட 2008 ஜனவரி 23 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி இலக்கம் 1533/16 இன் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டுமெனினும், 9 வர்த்தகங்களினால் நடைமுறை ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றருக்காததுடன், அதன் மூலம் சபைக்கு ரூபா 80,010 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,941,265 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,500,000 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்ட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டி ஒன்றில் இருந்து ஒரு மாதத்திற்கு 100 இற்கான கட்டணம் அறவீடு செய்து பதிவு செய்திருந்த போதிலும் அந்த கட்டணத்தை அறவீடு செய்வதற்காக துணை விதிகள் ஆக்கியிருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

2013 ஆண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் தேசிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் பல்வேறு கருமங்களுக்காக ரூபா 13,665,854 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2018 மார்ச் 06 திகதி வரை செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் சார்ந்த கருமங்களுக்காக திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றும் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை

மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாமை**

(i) 2014 ஆண்டின் போது உள்ளூராட்சி அமைச்சு பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹியங்கனை பிரதேச சபைக்கு சொந்தமான புதிய வாராந்த சந்தை மற்றும் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 4,106,149 தொகை செலவிடப்பட்டுள்ளது. அந்த காணி போதியளவு காணப்படாமை மற்றும் சதுப்பு நிலமாக காணப்பட்டதால் பயன்படுத்த முடியாதிருந்தது. அந்த வாராந்த சந்தையை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு உண்டாக்கப்படாமல் தனியார் காணி ஒன்றில் வாராந்த சந்தையை நடாத்திச் செல்வதற்காக ஆண்டின் போது ரூபா 120,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 10 மில்லியன் கடன் தொகை ஒன்று மற்றும் பிரதேச சபை நிதியத்தில் இருந்து ரூபா 6.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டு ரூபா 4,991,720 இற்கான பெறுமதிக்கு 2015 நிர்மாணவேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த தகனசாலையை செயற்படுத்துவதற்காக தேவையான வேலைகள் பூர்த்தி செய்யாதிருக்காமையால் பிரதேச சபைக்கு இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிகளில் ஊழியர்களின் வெற்றிடங்கள் 06 மற்றும் மிகைகள் 38 காணப்பட்டன.

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

2017 ஆண்டின் போது சொரபொர குளத்தில் அண்மையில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக 2016 நவம்பர் 17 திகதி ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் 5 ஆம் நிபந்தனையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கான வாடகைத் தொகையை அந்த மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டியதுடன், தாமதம் ஆகும் ஒவ்வொரு மாதத்திற்கும் 10 சதவீத கட்டணம் ஒன்று தண்டப்பணமாக அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், வரி செலுத்துவதற்கு புரக்கணித்த காரணத்தினால், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 407,993 இற்காக வாடகை தொகை மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற சொத்துக்கள்

பிரதேச சபைக்கு சொந்தமான கிரயம் கூட்டுத்தொகை ரூபா 2,147,854 தொகைக்கான முச்சக்கர வண்டியொன்று மற்றும் இரண்டு டிரக்டர் வண்டிகள் 03 வருடங்கள் முதல் 05 வரையான காலம் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அதனை திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்கான பிரதேச சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
| --- | --- |
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) களஞ்சியப் பதிவேடு முறைப்படி பேணியிருக்காமை. |
| (அ) வருமான நிருவாகம் | (i) வருமான பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| | (ii) நிலுவை வருமானம் அறவீடு செய்யாமை. |
| | (iii) விளம்பர அறிவித்தல் தொடர்பான தகவல்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) பிரதேசத்தில் காணப்படும் அறிவித்தல் பலகைகள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொண்டி ருக்கவில்லை. |